**20 எல்லாம் வல்ல சித்தரான படலம்**

அபிஷேக பாண்டியனும் அந்நாட்டு மக்களும் இம்மையிலும் மறுமையிலும் எல்லாப் பயனையும் பெற்றிட சோமசுந்தரக் கடவுளிடம் வேண்டினர். அவர்களுக்கு அருள திருவுள்ளம் கொண்ட ஈசன் ஓர் அழகிய சித்தர் வடிவு எடுத்து காண்போர் அதிசயிக்க தக்க சித்து வேலை செய்து வந்தார். மண்ணை பொன்னாக்குதல், முதியவனை இளைஞனாக்குதல், இளைஞனை முதியவனாக்குதல், ஊனத்தினை குணம் செய்தல், சிறுவர்களை முதியோர் ஆகுதல், மலடிக்கு மகப்பேறு அடையச் செய்தல், செல்வம் உடையவரின் செல்வங்களை ஏழைகளின் இல்லத்தில் சேர்த்தல் என பல சித்து வேலகளை செய்தார்.

இவற்றை கேள்வியுற்ற அபிஷேக பாண்டியன், சித்தரை அரச சபைக்கு அழைத்து வருமாறு ஆணையிட்டார். அழைத்து வரச் சென்ற அமைச்சர்களிடம் அரசனால் தனக்கு ஆவது ஏதுமில்லை என்று கூறி வர சித்தர் மறுத்துவிட்டார். அமைச்சர்கள் இதனை மன்னனிடம் கூற, இம்மை மறுமை பயனை வெறுத்த யோகிகள் இந்திரன், ப்ரம்மன், திருமால் இவர்களையே மதிக்க மாட்டார்கள், அப்படியிருக்க பூமியை ஆளும் மன்னர்களையா மதிக்கப் போகிறார்கள் என்று எண்ணினான் மன்னன்.

**பல்லவி**

அபிஷேக பாண்டியன் ஆண்ட பொற் காலத்தில்
அனைவரும் சுகம் பெற திருவுள்ளங் கொண்டாய்

**அனுபல்லவி**

அபிலாஷை பூர்த்தி செய்ய அத்புதம் பல செய்யும்
அருள்மிகு சித்தராய் திருவேடம் கொண்டாய்

**சரணம்**

அத்புதங்களைக் காண ஆவல் கொண்ட மன்னன்
வித்தகரை விரைவாய் அழைத்து வரச் சொன்னான்
சித்தருக்கு உலகில் எத்தகையோராலும்
எதுவும் தேவையில்லை என்று உணர்த்தினீர்